# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1566/1 - 2008 සැප්තැම්බර් 08 වැනි සඳුදා - 2008.09.08

1566/1 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 24

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (1) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2008, சனவரி 25 ஆந் திகதிய 1533/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 22 ஆம் இலக்க பணிப்புரையை இப்பணிப்புரையின் மூலம் இரத்துச் செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2008, செத்தெம்பர் 08.

9- 847/1

---

பணிப்புரை இல. 25

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டம்**

12 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தில் வழங்கப்படும் எஸ். எல். எஸ். உற்பத்திப் பொருட்கள் சான்றுப்படுத்தல் குறியினை கொண்டிருந்தாலன்றி கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பிவிசி குழாய்களையும் பொருத்துக்களையும் தயாரிப்பாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் தயாரிக்கவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்த விலையில் அல்லது சில்லறை விலையில் விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, விற்பனைக்கு வைக்கவோ, விற்பனைக்கு விடவோ முடியாது எனவும் 1985 ஆம்

**கவனிக்க.**- 1565/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகையின் இறுதி இலக்கம் 1565/22.

ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டின் இறக்குமதிகள் (நியமப்படுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் தொழிற்படுத்தப்படும் இறக்குமதி பரிசோதனை செயல் திட்டத்தின் கீழ் விற்பனைக்கென பரிசோதனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி, கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் குழாய்களையும் பொருத்துக்களையும் இறக்குமதியாளர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் இறக்குமதி செய்யவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது மொத்த விலையிலோ அல்லது சில்லறை விலையிலோ விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்கு காட்சிப்படுத்தவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனை செய்யக் கோரவோ முடியாதென பணிப்புரை வழங்குகின்றது.

(i) குடிக்கத்தக்க குளிர் நீர் வழங்கலுக்கான கடினமான வளையாத பிளாஸ்ரிக் குளோரைட் குழாய்கள் – எஸ். எல். எஸ். 147;

(ii) குடிக்கத்தக்க குளிர் நீர் வழங்கலுக்கான கடினமான வளையாத பிளாஸ்ரிக் குளோரைட் குழாய் இணைப்புக்களும் பொருத்துக்களும் – எஸ். எல். எஸ். 659.

இப்பணிப்புரையானது, 2009, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு - 1,
2008, செத்தெம்பர் 08.

09 - 847/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.